செய்தி வெளியீடு எண் 26 நாள். 19.02.2010

செய்தி வெளியீடு–19.2.2010

## பள்ளிப்பட்டிலிருந்து ஆந்திரா சென்று திரும்பிய லாரி கவிழ்ந்து உயிரிழந்த 9 பேரின் குடும்பங்களுக்குத் தலா ஒரு இலட்சம் ரூபாய்! காயமடைந்த 35 பேருக்குத் தலா 20 ஆயிரம் ரூபாய் வீதம் மொத்தம் 16 இலட்சம் ரூபாய் நிவாரண உதவி!

## முதலமைச்சர் கலைஞர் ஆணை!

திருப்பதியில் நடைபெற்ற திருமணத்திற்காக தமிழகத்தில் திருவள்ளூர் மாவட்டம் பள்ளிப்பட்டு மற்றும் ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த 60 பேர் லாரியில் சென்று திரும்பிவரும்போது, 18.2.2010 அன்று ஆந்திர மாநிலம் புத்தூர் அருகே அந்த லாரி கவிழ்ந்து விபத்து ஏற்பட்டது. இந்த விபத்தில்,

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி புதூர்மேடு – அருந்ததியர் காலனியைச் சேர்ந்த செங்கையா என்பவரின் மகன் வாசு,
சின்னபிட்டா என்பவரின் மகன் சி.எச். செல்வராஜ்,
சின்னக் கண்ணன் என்பவரின் மகன் சி. சரவணன்,
முனுசாமி என்பவரின் மகன் மணி,

சித்தப்பனூர் அருந்ததியர் காலனியைச் சேர்ந்த கேசவலு என்ற பன்டுகொன் என்பவரின் மகன் ராகவன்,

ராஜீலு கண்டிகையைச் சேர்ந்த கோபால் என்பவரின் மகன் ஜி. வெங்கடேசலு,
சின்னப்பா என்பவரின் 10 வயது மகள் தீபா,
இராமசாமி என்பவரின் மகன் ட்டி. வேலு,

வேலூர் மாவட்டம் நெமிலி கிராமத்தைச் சேர்ந்த முருகடு என்பவரின் மனைவி பயனட்மா

ஆகிய தமிழகத்தைச் சேர்ந்த 9 பேரும், ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த பழனியம்மா, முருகேஷ் ஆகிய இருவரும் ஆக மொத்தம் 11 பேர்

/2

உயிரிழந்துள்ளனர். மேலும், தமிழகத்தைச் சேர்ந்த 35 பேர் இவ்விபத்தில் காயமடைந்து திருப்பதி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இத்துயர சம்பவம் பற்றி அறிந்ததும், மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்துள்ள முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்குத் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார். அத்துடன் பள்ளிப்பட்டு சட்டப்பேரவை உறுப்பினர் டாக்டர் இஎஸ்.எஸ். இராமன் அவர்களின் பரிந்துரையை ஏற்று உயிரிழந்தவர்களில் தமிழகத்தைச் சேர்ந்த 9 பேரின் குடும்பம் ஒவ்வொன்றுக்கும் தலா ஒரு இலட்சம் ரூபாய் வீதமும், காயமடைந்த 35 பேருக்கும் தலா 20 ஆயிரம் ரூபாய் வீதமும் மொத்தம் 16 இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிவாரண உதவியாக வழங்கிடவும் முதலமைச்சர் கலைஞர் உடனடியாக ஆணையிட்டுள்ளார்.

******

2/2

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9